<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள்– தமிழ்நாடு அமைச்சுப்பணி– திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகு– திருமதி.பா.வனஜா த/பெ. காலஞ்சென்ற திரு.ச.பாக்கியசாமி– கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது– பணியை வரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>
<u>பணிகள் அலகு, பணி9(2) பிரிவு</u>

<u>அரசாணை (3டி) எண்:29</u>

நாள்: 01.04.2022
திருவள்ளுவராண்டு 2053,
பிலவ வருடம், பங்குனி–18

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020
2. கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு4/49962/2015, நாள் 07.09.2019.

********

<u>ஆணை:</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், சங்கரன்கோவில் வட்டம், வாடிக்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றி பணியிடையே 19.01.2002 அன்று காலஞ்சென்ற திரு ச.பாக்கியசாமி என்பவரின் மகள் திருமதி.பா.வனஜா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி மூன்று ஆண்டு காலத்திற்குள் 06.10.2004 அன்று விண்ணப்பம் அளித்த நாளில் 18 வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், தனியர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரிய நாளில் இளநிலை வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கான பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றுள்ளார் என்றும், இந்நேர்வில், காலஞ்சென்ற அரசு ஊழியர் இறந்து மூன்றாண்டிற்குள் உரிய கல்வித்தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் (ஜுன் 2003) பெற்றுள்ளார் என்றும், தனியர் அரசுப்பணியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 26.03.2015 (தேதியில்) 28 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், திருமதி பா.வனஜா என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 02.03.2016–ன்படி, தனியர் திருமதி.பா.வனஜா என்பவரின் பணியினை இளநிலை வருவாய் உதவியாளர் நிலையில் தனியர் பணியேற்ற நாளான 26.03.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்ற முன்மொழிவினை ஏற்று, திருமதி.பா.வனஜா என்பவரின் இளநிலை வருவாய் உதவியாளர் பணியினை, தனியர் பணியேற்ற நாளான 26.03.2015 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ததின் பேரில், அரசாணை பெற்றுத்தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

// த.பி.பா //

2. கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், வாடிக்கோட்டை கிராமத்தில் கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றி பணியிடையே 19.01.2002 அன்று காலஞ்சென்ற திரு.ச.பாக்கியசாமி என்பவரின் மகள் திருமதி.பா.வனஜா என்பவருக்கு பணிநியமனத்திற்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளதால், திருமதி.பா.வனஜா என்பவரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணிபேற்ற நாளான 26.03.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை இரத்து செய்து, தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவு 58–இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 54(A) [தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15]–ஐயும், நியமன நாளிலிருந்து பணப்பலன்கள் வழங்க ஏதுவாக அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii) [தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)] ஆகியவற்றையும் தளர்வு செய்து, தனியர் திருமதி.பா.வனஜா என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 26.03.2015 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.7401/க்யூ–2/2021–1, நாள் . 27.04.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.13890/ஜி2/2021–1, நாள் 02.06.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி.
திருமதி.பா.வனஜா, இளநிலை வருவாய் ஆய்வாளர்,
(மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மூலமாக)

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.